V10SS

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu

விருதுநகர் மாவட்டப் பொதுத் தேர்வுகள்

முதல் திருப்புதல் தேர்வு - ஜனவரி 2023

-----

## வகுப்பு 10

நேரம்: 3.00 மணி

## சமூக அறிவியல்

மொத்த மதிப்பெண்கள்: 100

### பகுதி - I

குறிப்பு: **i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** **14×1=14**

**ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.**

1) பெருநாட்டை யார் தங்களுடைய பகுதிகளில் ஒன்றாக ஆக்கிக்கொண்டனர்?
அ) ஆங்கிலேயர் ஆ) ஸ்பானியர் இ) ரஷ்யா ஈ) பிரெஞ்சுக்காரர்

2) ஜப்பானியக் கப்பற்படை அமெரிக்க கப்பற்படையில் எங்கே தோற்கடிக்கப்பட்டது?
அ) க்வாடல்கெனால் போர் ஆ) மிட்வே போர்
இ) லெனின் கிரேடு போர் ஈ) எல் அலாமெய்ன் போர்

3) பூலித்தேவர் ஆண்ட பகுதி அமைந்துள்ள இடம்
அ) மதுரை ஆ) நெற்கட்டும் செவல் இ) வாராங்கல் ஈ) சிவகிரி

4) இந்திய தேசிய காங்கிரசின் எந்த அமர்வில் ஒத்துழையாமை இயக்கத்துக்கு அனுமதி வழங்கப்பட்டது?
அ) பம்பாய் ஆ) மதராஸ் இ) கல்கத்தா ஈ) நாக்பூர்

5) **சரியான கூற்றைத் தேர்வு செய்யவும்:**
**கூற்று** : சென்னை மாகாணத்தில் 1920 முதல் 1937 வரை நீதிக்கட்சி தொடர்ந்து ஆட்சியில் இருந்தது.
**காரணம்** : இக்காலகட்டத்தில் இரட்டையாட்சிக்கு எதிராக காங்கிரஸ் கட்சி சட்டமன்றத்தைப் புறக்கணித்தது.
அ) காரணம், கூற்று ஆகியவை சரி.
ஆ) கூற்று சரி ஆனால் காரணம் கூற்றின் சரியான விளக்கமல்ல.
இ) காரணம், கூற்று இரண்டுமே தவறு.
ஈ) காரணம் சரி. ஆனால் கூற்றுடன் அது பொருந்தவில்லை.

6) இந்தியாவின் வடக்கு தெற்கு பரவல்
அ) 2500 கி.மீ ஆ) 2933 கி.மீ இ) 3214 கி.மீ ஈ) 2814 கி.மீ

7) இந்தியாவின் உயரமான புவிஈர்ப்பு அணை
அ) ஹிராகுட் அணை ஆ) பக்ராநங்கல் அணை
இ) மேட்டூர் அணை ஈ) நாகர்ஜீனா சாகர் அணை

8) மக்கள் தொகையின் பல்வேறு அம்சங்கள் பற்றிய அறிவியல் பூர்வமான படிப்பு ..............
அ) வரைபடவியல் ஆ) மக்களியல் இ) மானுடவியல் ஈ) கல்வெட்டியல்

9) தோல் பதனிடும் தொழிலகங்கள் அமைந்துள்ள நகரம் ...............
அ) சேலம் ஆ) ஈரோடு இ) வானியம்பாடி ஈ) தூத்துக்குடி

10) பொருந்தாதை தேர்ந்தெடுக்கவும்.
அ) வெள்ளப்பெருக்கு கால்வாய் ஆ) வற்றாத கால்வாய்
இ) ஏரிப்பாசனம் ஈ) கால்வாய்

11) கீழ்க்காணும் எந்த மாநிலங்கள் பொதுவான உயர்நீதிமன்றத்தைப் பெற்றுள்ளன?
அ) தமிழ்நாடு மற்றும் ஆந்திரப்பிரதேசம் ஆ) கேரளா மற்றும் தெலுங்கானா
இ) பஞ்சாப் மற்றும் ஹரியானா ஈ) மகாராஷ்டிரா மற்றும் குஜராத்

12) 1954 இல் இந்தியா மற்றும் சீனாவால் கையெழுத்திடப்பட்ட ஒப்பந்தம் இது தொடர்பானது
அ) வியாபாரம் மற்றும் வணிகம் ஆ) சாதாரண உறவுகளை மீட்டெடுப்பது
இ) கலாச்சார பரிமாற்றங்கள் ஈ) ஐந்து கொள்கைகளுடன் இணைந்திருத்தல்

13) கருப்பு பணத்திற்கான காரணங்கள் என கண்டறியப்பட்ட அடையாளம் எவை?
அ) பண்டங்களின் பற்றாக்குறை ஆ) அதிக வரி விகிதம்
இ) கடத்தல் ஈ) மேற்கூறிய அனைத்தும்

14) **சரியான கூற்றைத் தேர்வு செய்க:**
**கூற்று** : விலை குறைந்தால் வாங்கும் சக்தி அதிகரிக்கிறது மற்றும் இது நேர்மாறானது.
**காரணம்** : பொருள்களின் உற்பத்தி குறைந்து, விலை அதிகரிப்பதால் வாங்கும் திறன் பாதிக்கப்படுகிறது.
அ) கூற்று சரியானது, காரணம் தவறானது.
ஆ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் தவறானது.
இ) கூற்று சரியானது, ஆனால் காரணம் சரியான விளக்கமல்ல.
ஈ) கூற்று சரியானது, காரணம் கூற்றின் சரியான விளக்கம்.

### பகுதி - II

குறிப்பு: **எவையேனும் 10 வினாக்களுக்கு விடையளிக்கவும்.** **10×2=20**
**வினா எண் 28க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

15) இந்தோ-சீனாவில் நடைபெற்ற "வெள்ளை பயங்கரவாதம்" குறித்து நீங்கள் அறிந்ததென்ன?

16) பாக்தாத் உடன்படிக்கை ... எழுதுக.

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

 www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu

17) பிரம்மசமாஜத்தால் ஒழிக்கப்பட்ட சமூகத் தீமைகள் யாவை?
18) ஆங்கிலேய இந்தியாவில் விவசாயிகளின் கிளர்ச்சி எவ்வாறு வகைப்படுத்தப்பட்டுள்ளது?
19) தங்களுடைய எழுத்துக்களின் மூலம் தமிழ் இலக்கியத்தின் புத்துயிர்ப்புக்குப் பங்களிப்பு செய்த ஆளுமைகளைப் பட்டியலிடவும்.
20) இந்தியாவில் சதுப்புநிலக் காடுகள் காணப்படும் இடங்களைக் குறிப்பிடுக.
21) வளத்தை வரையறுத்து அதன் வகைகளை குறிப்பிடுக.
22) தமிழ்நாட்டின் வேளாண் பருவக்காலங்களை எழுதுக.
23) புயலின்போது வானிலை மையம் மீனவர்களை எவ்வாறு எச்சரிக்கிறது?
24) நம் நாட்டின் குழாய் போக்குவரத்து அமைப்பு பற்றி ஒரு குறிப்பு எழுதுக.
25) இந்தியாவின் அணுசக்தி கொள்கையை விவரி.
26) இந்தியாவின் செம்மொழிகள் எவை?
27) உலகமயமாக்கலின் வகைகளை எழுதுக.
28) பண்டங்கள் மற்றும் பணிகள் வரி - சிறுகுறிப்பு வரைக.

## பகுதி - III

**10×5=50**

குறிப்பு: **எவையேனும் 10 வினாக்களுக்கு விடையளிக்கவும்.**
**வினா எண் 42க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

29) **கோடிட்ட இடங்களை நிரப்புக:**
i) துருக்கிய அரசுப் பேரரசை ஏற்படுத்தும் நோக்கைக் கொண்டிருந்த ஒப்பந்தம் ............ ஆகும்.
ii) W.C. பானர்ஜி இந்திய தேசிய காங்கிரசின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆண்டு ............
iii) நீலகிரி மற்றும் தர்மபுரி மாவட்டங்களுக்கிடையே காணப்படும்சூபீடபூமி ............ ஆகும்.
iv) ............ நாட்டின் உண்மையான தலைவராகவும், நாட்டின் முக்கியச் செய்தி தொடர்பாளராகவும் செயல்படுகிறார்.
v) ஒரு நல்ல பொருளாதாரம் ............ன் விரைவான வளர்ச்சிக்காக அறிமுகப்படுத்தப்படுகிறது.
30) ஜெர்மனியில் ஹிட்லரின் எழுச்சிக்கு இட்டுச் சென்ற சூழ்நிலைகளைக் கண்டறியவும்.
31) சட்டமறுப்பு இயக்கத்தில் தமிழ்நாடு வகித்த பாத்திரத்தை விவரி.
32) **அ) வேறுபடுத்துக:**
i) சணல் மற்றும் சர்க்கரை ஆலைகள் ii) மேற்பரப்பு நீர் மற்றும் நிலத்தடி நீர்
**ஆ) காரணம் கூறுக:**
தென்மேற்கு பருவக்காற்று காலத்தில் தமிழ்நாடு மிகக் குறைந்த மழையைப் பெறுகிறது.
33) இமயமலையின் உட்பிரிவுகளையும் அதன் முக்கியத்துவம் பற்றியும் விவரி.
34) நகரமயமாக்கம் என்றால் என்ன? அதன் சிக்கல்கள் யாவை?
35) இந்திய அரசியலமைப்பின் சிறப்புக் கூறுகளை விளக்குக.
36) பெட்ரோலியம் ஏற்றுமதி செய்யும் நாடுகள் அமைப்பின் (OPEC) திட்டம் குறித்தும் அவ்வமைப்பு எவ்வாறு பிற நாடுகளுக்கு உதவி செய்கின்றன என்பது குறித்தும் குறிப்பிடுக.
37) முதலமைச்சரின் அதிகாரங்கள் மற்றும் பணிகளை விவரி.
38) GDPஐ கணக்கிடும் முறைகள் யாவை? அவைகளை விவரி.
39) பசுமைப்புரட்சி ஏன் தோன்றியது என்பதைப் பற்றி விவரி.
40) தமிழ்நாட்டில் நெசவுத்தொழில் தொகுப்பு பற்றி எழுதுக.

குறிப்பு: **பார்வையற்ற மாணவர்கள் காலக்கோடு மற்றும் வரைபடத்தில் முறையே நிகழ்வுகளையும், இடங்களையும் பற்றிய குறிப்புகள் மட்டும் எழுத வேண்டும்.**

41) **காலக்கோடு வரைக:**
1920 முதல் 1940 வரையிலான ஆண்டுக்குட்பட்ட முக்கிய ஐந்து நிகழ்வுகளைக் காலக்கோட்டில் எழுதுக.
42) **உலக வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களைக் குறிக்கவும்:**
(i) பிரான்ஸ் (ii) இங்கிலாந்து (iii) ஜப்பான் (iv) மொராக்கோ (v) துருக்கி

## பகுதி - IV

**2×8=16**

குறிப்பு: **பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும்.**

43) பெண்களின் மேம்பாட்டிற்கு 19 ஆம் நூற்றாண்டு சீர்திருத்தவாதிகள் ஆற்றிய பணிகள் குறித்து ஒரு கட்டுரை வரைக.
**(அல்லது)**
1857 ஆம் ஆண்டின் கிளர்ச்சிக்கான காரணங்கள் குறித்து விரிவாக ஆராயவும்.

குறிப்பு: **பார்வையற்ற மாணவர்கள் வரைபட தொடர்புடைய வினாக்களுக்கு குறிப்புகள் மட்டும் எழுதவும்.**

44) **கொடுக்கப்பட்டுள்ள தமிழ்நாடு வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களைக் குறிக்கவும்:**
i) காவிரி டெல்டா பகுதி ii) முதுமலை விலங்குகள் சரணாலயம்
iii) மன்னார் வளைகுடா iv) வைகை ஆறு
v) கோதையாறு அணை vi) கரும்பு விளையும் பகுதி - 1
vii) ஏதாவது ஒரு பறவைகள் சரணாலயம் viii) தகவல் தொழில்நுட்பம்
**(அல்லது)**
**கொடுக்கப்பட்டுள்ள இந்திய வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களைக் குறிக்கவும்:**
i) எவரெஸ்ட் ii) சோட்டா நாகபுரி பீடபூமி
iii) ரான் ஆப் கச் iv) சோழமண்டல கடற்கரை
v) கங்கா ஆறு vi) சிலிகா ஏரி
vii) சணல் விளையும் பகுதி viii) மாங்குரோவ் காடுகள்

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com